ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீலோககுரவே நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

**பொய்கையாழ்வார், பிள்ளைலோகாசாரியர் - வருஷதிருநட்சத்திரம் - ஐப்பசி - திருவோணம்**



பொய்கையாழ்வார், காஞ்சீபுரம், அவதாரஸ்தலம்



பிள்ளைலோகாசாரியர், ஸ்ரீரங்கம்
திருவடிநிலை – அழகியமணவாளப்பெருமாள் நாயனார்

## பொய்கையாழ்வார்

### தனியன்

துலாயாம் ஸ்ரவணே ஜாதம் காஞ்ச்யாம் காஞ்ச நவாரிஜாத் /
த்வாபரே பாஞ்சஜந்யாம்ஸம் ஸரோயோகி நமாஸ்ரயே //
காஞ்ச்யாம் ஸரஸி ஹேமாப்ஜே ஜாதம் காஸாரயோகிநம் /
கலயே ய: ஸ்ரிய: பத்யூ ரவிம் தீப மகல்பயத் //

இவர் அருளிச்செய்த ப்ரபந்தம் - முதல் திருவந்தாதி

### நாள்பாட்டு – உபதேசரத்தினமாலை 6, 7 பாசுரங்கள்

ஐப்பசியிலோண மவிட்டம்சதயமிவை
ஒப்பிலவா நாள்க ளுலகத்தீர் - எப்புவியும்
பேசுபுகழ்ப் பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார்
தேசுடனே தோன்றுசிறப்பால்.

மற்றுள்ளவாழ்வார்களுக்கு முன்னே வந்துதித்து
நற்றமிழால் நூல் செய்து நாட்டையுய்த்த - பெற்றிமையோ
ரென்று முதலாழ்வார்களென்னும் பெயரிவர்க்கு
நின்ற துலகத்தே நிகழ்ந்து.

### வாழித்திருநாமம்

செய்யதுலா வோணத்திற் செகத்துதித்தான் வாழியே
திருக்கச்சி மாநகரஞ் செழிக்கவந்தோன் வாழியே
வையந் தகளிநூறும் வகுத்துரைத்தான் வாழியே
வநசமலர்க் கருவதனில் வந்தமைந்தான் வாழியே
வெய்ய கதிரோன் தன்னை விளக்கிட்டான் வாழியே
வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே
பொய்கைமுனி வடிவழகும் பொற்பதமும் வாழியே
பொன் முடியுந் திருமுகமும் பூதலத்தில் வாழியே

## பிள்ளைலோகாசாரியர்

### தனியன்

துலாயாம் ஸ்ரவணே ஜாதம் லோகார்ய மஹமாஸ்ரயே /
ஸ்ரீகிருஷ்ணபாத தநயம் தத்பதாம்புஜ ஸம்ஸ்ரிதம் //
லோகாசார்யாய குரவே க்ருஷ்ண பாதஸ்ய ஸூநவே /
ஸம்ஸாரபோகி ஸந்தஷ்ட ஜீவஜீவாதவே நம: //

நாள்பாட்டு - உபதேசரத்தினமாலை 53வது பாசுரம் முதல் 59ஆம் பாசுரம் வரை

அன்ன புகழ்முடும்பை யண்ணலுலகாசிரியன்
இன்னருளால்செய்தகலை யாவையிலும் - உன்னில்
திகழ்வசன பூடணத்தின் சீர்மை யொன்றுக்கில்லை
புகழல விவ்வார்தை மெயிப்போது.

முன்னம்குரவோர் மொழிந்த வசனங்கள் தன்னை
மிகக்கொண்டு கற்றோர் தம்முயிர்க்கு - மின்னணியாச்
சேரச்சமைத்தவரே சீர்வசன பூடணமென் பேர்
இக்கலைக்கிட்டார் பின்.

ஆர்வசனபூடணத்தி னாழ்பொருளெல்லமறிவார்
ஆரதுசொன்னேரி லநுட்டிப்பார் - ஓரொருவ
ருண்டாகி லத்தனைகாணுள்ளமே
எல்லார்க்கும் அண்டாத தன்றோவது.

உய்யநினைவுடையீ ருங்களுக்குச் சொல்லுகின்றேன்
வையகுருமுன்னம் வாய்மொழிந்த - செய்யகலை
யாம் வசனபூடணத்தினாழ் பொருளைக்
கற்றதனுக் காம் நிலையில் நில்லுமறிந்து.

தேசிகர்பாற் கேட்ட செழும்பொருளைச் . சிந்தைதன்னில்
மாசறவேயூன்ற மநநஞ்செய்து - ஆசரிக்க
வல்லார்கள் தாம் வசனபூடணத்தின் வான்பொருளைக்
கல்லாத தென்னோ கவர்ந்து.

சச்சம்பிரதாயம் தாமுடையோர் கேட்டக்கால்
மெச்சும்வியாக்கியை தானுண்டாகில் - நச்சி
அதிகரியும் நீர் வசனபூடணத்துக்கற்ற
மதியுடையீர். மத்தியத்தராய்.

சீர்வசன பூடணத்தன் செம்பொருளைச். சிந்தைதன்னால்
தேரிலுமாம் வாய்கொண்டு செப்பிலுமாம் - ஆரியர்காள்
என்தனக்கு நாளு மினிதாகநின்றதையோ
உந்தமக்கெவ்வின்ப முளதாம்.

வாழித்திநாமம்

அத்திகிரி யருளாள ரனுமதியோன் வாழியே
ஐப்பசியில் திருவோணத் தவதரித்தான் வாழியே
முத்திநெறி மறைத்தமிழால் மொழிந்தருள்வோன் வாழியே
மூதரிய மணவாளன் முன்புதித்தான் வாழியே
நித்தியம் நம்பிள்ளை பதம் நெஞ்சில் வைப்போன் வாழியே
நீள்வசன பூடணத்தால் நியமித்தான் வாழியே
உத்தமமாம் முடும்பைநக ருதித்தவள்ளல் வாழியே
உலகாரியன் பதங்களூழிதொறும் வாழியே

## இராமாநுஜநூற்றந்தாதி - 8ஆம் பாசுரம்

வருத்தும் புறவிருள் மாற்ற எம்பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி. ஒன்றத்
திரித்தின்றெரித்த திருவிளக்கைத்தன் திருவுள்ளத்தே
இருத்தும் பரமன். இராமானுசனெம் இறையவனே.

## தனிப்பாடல் - மாமுனிகள் அருளியது

வாழி உலகாசிரியன் வாழியவன் மன்னுகுலம்
வாழி முடும்பை யென்னு மாநகரம் - வாழி
மனம்சூழ்ந்த பேரின்ப மல்குமிகு நல்லார்
இனம் சூழ்ந்திருக்கும் இருப்பு.

இவர் ஸ்ரீவத்ஸ கோத்ரம் முடும்பை நம்பி வம்சத்தில் வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கும், ஸ்ரீரங்கநாச்சியாருக்கும் புத்ரராக ஐப்பசி மாதம் திருவோண நட்சத்திரத்தல் அவதரித்தார். நம்பிள்ளையின் ஆசீர்வாதத்தால் இவர் அவதரித்ததால் இவருக்கு நம்பிள்ளையின் பட்டப்பெயரான `லோகாசார்யன்' என்று பெயரிட்டு `பிள்ளை' என்கிற அடைமொழியும் சேர்த்து `பிள்ளைலோகாசாரியன்' என்று பெற்றோர்கள் அழைத்தனர். நம்பெருமாள் நம்பிள்ளையின் ஆனையைச் சிரமேற்கொண்டு வடக்குத் திருவீதிப்பிள்ளைக்கு இரண்டாவதாக ஒருபிள்ளையை தோற்றிவித்தார். அழகியமணவாளன் பிள்ளை என்பது தோற்ற இக்குழந்தைக்கு அழகியமணவாளப் பெருமாள் நாயனார் என்று பெயரிட்டு அழைத்தனர். வடக்குத் திருவீதிப்பிள்ளை தம் இரண்டு குழந்தைகளையும் ராம, லசஷ்மணர்களைப் போலவும் பலராமர், கிருஷ்ணர்களைப் போலவும் வளர்த்து வந்தார். இவ்விருவரும் இல்லற வாழ்க்கையில் ஈடுபடாடு கொள்ளமல் ஸ்ரீவைஷ்ண சம்பிரதயத்தை வளர்ப்பதிலேயே தங்களுடைய வாழ்நாள் முழுவதும் செலவிட்டனர். லோகாசாரியர் திருமந்திரம், த்வயம், சரமஸ்லோகம் ஆகிய மூன்று ரஹஸ்யங்களின் விளக்கங்களையும் சித், அசித், ஈஸ்வரன் ஆகிய மூன்று உண்மைப் பொருள்களின் விளக்கங்களையும் விரிவாக அருளிச்செய்வதையே தம்முடைய முதன்மைப் பணியாகக் கொண்டு பல ரஹஸ்ய நூல்களை அருளிச்செய்தார்.

இவர் நம்பிள்ளையிடத்திலும், வடக்குத்திருவதீப்பிள்ளையிடத்திலும் அர்த்த விசேஷங்களை கேட்டார். அதனை தம்முடய சிஷ்யர்களுக்கும் உபதேசித்தார்.

பாரில் ஆசையுடையோர்க்கெல்லாம் எந்த ப்ரதி பலனையும் எதிர்பார்க்காமல் அநுக்ரஹிப்பவர்கள் க்ருபா மாத்ர ப்ரஸந்நாசார்யர்கள். நமது ஆசார்ய கோஷ்டியில் எம்பெருமானார் தான் முதல் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசாரியார் ஆவர். அந்தமுறையில் இவரும் ஒருசிறந்த க்ருபா மாத்ர ப்ரஸந்நாசாரியர் ஆவார்.

## இவர் அருளிச்செய்த நூல்கள்

இவ்விருள் தருமாஞாலத்தில் அகவிருளை நீக்க அஷ்டாதஸ ரஹஸ்யமென்னும் 18 கீழ்கண்ட நுல்களை அருளிச்செய்தார்.

யாத்ருச்சிகப்படி, முமுசக்ஷுப்படி, ச்ரியப்பதிப்படி, பரந்தபடி, தனித்வயம், தனிசரமம், தனிப்ரணவம், ஸாரசங்க்ரஹம் தத்வத்ரயம், தத்த்வசேகரம், அர்த்த பஞ்சகம், அர்ச்சிராதி, ப்ரமேயசேகரம், ஸம்ஸார ஸாம்ராஜ்யம், நவரத்நமாலை, நவவித சம்பந்தம், ப்ரபந்ந பரித்ராணம், ஸ்ரீவசந பூஷணம்

## இவருடையசிஷ்யர்கள்

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் (திருத்தம்பியார்), கூரகுலோத்தமதாஸர், விளாஞ்சோலைப்பிள்ளை, மணப்காக்கத்து நம்பி, (ஸ்ரீவசநபூஷணம் இயற்று வதர்க்கு காரணகர்த்தாவாக இருந்தவர்) திகழக்கிடந்தார் திருநாவீறுடைய தாஸரண்ணர், திருவாய்மொழிப் பிள்ளை, திருப்புட்குழிஜீயர், திருக்கண்ணங்குடிப்பிள்ளை, நாலூர்பிள்ளை.

## நம்பெருமாளும் லோகாசாரியரும்

கி.பி. 1309ல் ஸ்ரீரங்கம் முகம்மதிய படையெடுப்புக்கு ஆட்பட்ட காலத்தில் அரங்க நகர்க்கு இறையாம் நம்பெருமாளையும் நாச்சிமார்களையும் ரகசியமாகக்காப்பாற்றிக் காட்டு வழியாக தம் சிஷ்யர்களுடன் திருமாலிருஞ்சோலை மலைக்கு அருகில் ஆனைமலையின் பக்கம் ஜோதிஷ்குடி என்ற கொடுக்குளம் ஊரில் பிள்ளைலோகாச்சார்யர் எழுந்தருளச்செய்தார். நம்பெருமாளை காப்பற்றிய பெருமை இவரையே சேரும்.

உடல் நலம் குன்றிய இவர் அச்சமயம் மதுரையில் அமைச்சராக இருந்த திருவாய்மொழிபிள்ளையை திருத்தி பணிகொண்டு அவரை எம்பெருமானார் தரிசனத்திற்கு தலைமை ஏற்கச்செய்ய வேண்டும் என்று திருவுள்ளம் பற்றி தமது சிஷ்யர்களான கூரகுலோத்தமதாசர், விளஞ்சோளைப்பிள்ளை, நாலூர்ப்பிள்ளை, திருக்கண்ணங்குடி பிள்ளை ஆகியோரை நியமித்து கி.பி. 1310ல் ஆனி மாதம் சுக்ல பக்ஷ த்வாதசியில் நம்பெருமாளை தியானித்துக் கொண்டு ஆசார்யன் திருவடியடைந்தார்.

நம்பெருமாளுக்காகவே தம்மையே தியாகம் செய்த பெருமை இவர் ஒருவருக்கே உண்டு.

## இரஹஸ்யம் விளைந்த மண்

மாமுனிகள் திருவரங்கத்தில் இருந்த பொழுது பிள்ளைலோகாசாரியர் எழுந்தருளியிருந்த இடம் சென்று இது `இரஹஸ்யம் விளைந்த மண்' என்று சொல்லி மண்ணில் புரள்வாராம்.

## இவருடைய அவதாரமகிமை

ஐப்பசியில் திருவோணத்தன்று அவதரித்த பரமகாருணிகரான இவ்வாசாரியரின் பெருமையைச்சிறிது கீழே அனுபவிப்போம். இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானப் பெருமைகள் ஒரு புறமிருக்க, பரமகருனையின் திறத்தை என்னென்று பகர்வது. ஆசாரியர்கள் பொதுவாக இருவகைப்படுவர்கள் 1. அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்கள் 2. க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர்கள். சிஷ்யர்கள் பலகால் துவண்டு வேண்ட, அதனாலே அநுக்ரஹிப்பவர்கள் அநுவ்ருத்தி ப்ரஸந்நாசார்யர்களாவர். சிஷ்யப்ரார்த்தனையைச் சிறிதும் எதிர்பாராமல் தம்முடைய இயற்கை யின்னருளால் தாமாகக் கனிந்து பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத் திருத்திப் பணிகொள்வான் என்ற கணக்கிலே தம்பேறாக அநுக்ரஹித்தருள்பவர்கள் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யர்கள். நமது ஆசார்ய கோஷ்டியில் எம்பெருமானார் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசார்யரென்ற பட்டத்தை முதன்மையாகப் பெற்றவர். ஆயினும் அவர் ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு க்ரந்தமும் அருளிச் செய்தாரல்லர். ப்ரஹ்மஸூத்ரங்களின் அர்த்தங்களை விவரிக்க மூன்று நூல்களை அருளிச்செய்தார். இவர் ரஹஸ்யார்த்த விவரணமாக ஒரு சிறு நூலாவது அருளிச் செய்து இருக்கலாம். இன்னுமொரு திருக்கோலம் பூண்டு (அதாவது மணவாளமாமுனிகளாக அவதரித்தது) மிக விரிவாக அருளிச்செய்யவேணுமென்று திருவுள்ளம்பற்றி இருந்தமையாலே ஸ்ரீராமாநுஜரான அந்த அவதாரந்தன்னிலே ரஹஸ்யார்த்தங்களை ஏடுபடுத்தாமலே சென்றனர்.

ஸ்ரீபாஷ்யம், கீதாபாஷ்யம், கத்யத்ரயம் முதலிய திவ்ய க்ரந்தங்களில் ஸம்ரதாய ரஹஸ்யார்த்தங்களும் ஆங்காங்குச் சேமிக்கப்பட்டே இருந்தாலும், அவற்றைக் கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டித் தாராத குறை குறையே. அக்குறை தீரவே ஸர்வஜ்ஞ ஸார்வபௌமரான இப்பிள்ளையுலகாசிரியர் தாமே முதன்முதலாக ஸ்ரீவைஷ்ணவ மண்டலிக்கு மஹோபகாரஞ் செய்தருளினார். லோகாசார்யர் என்கிற திருநாமம் இவர்க்கே தகும். இவ்விருள் தருமாஞாலத்தின் அகவிருளை அறவேயொழிக்கவல்ல திவ்ய ஸ்ரீஸூக்திகளைத் தேனும், பாலும், நெய்யும், கன்னலும் அமுதுமாக அளித்தருளினவர் இம்மஹாசார்யர்.

இவருடைய ஸர்வஜ் ஞத்வமும், பரமகாருணிகத்வமும், பரம ப்ராமாணிகத்வமும் ஒவ்வொன்றும் நெஞ்சால் நினைப்பரிதே. ஒரு அர்த்தத்திலும் ஆக்ரஹமின்றிக்கே, ஆசார்ய பரம்பராப்ராப்தமான அர்த்தங்களையே அற்புதமாக அமைத்திருக்கும் அழகு இவருடைய க்ரந்தங்களுக்கே அஸாதாரணச் செல்வமாயிருக்கும். இவர் அருளிச் செய்த நூல்கள் அஷ்டாதச ரஹஸ்யம் என்று ஸுப்ரஸத்தமாயிருக்கும். அவற்றுள் ஒப்பில்லாத திவ்யசாஸ்திரம் ஸ்ரீவசனபூஷணம்.

(மேலே குறிப்பிட்ட விஷயங்கள் காஞ்சீ ஸ்வாமி அருயுள்ள திருவத்யயனோத்ஸவ வைபவ தீபிகையிலிருந்து எடுக்கப்பட்டது)

பொய்கையாழ்வார், பிள்ளைலோகாசாரியர் திருவடிகளே சரணம்.

வாசிக தோஷ: சஷந்தவ்ய: